**OS No.53/2020**

PW 1 – நிர்மலாவளன் அரசி

நாள் 23.09.2025

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.**

என் வீட்டை முழுமையாக இடித்துவிட்டு வீடு கட்டவில்லை. பழைய வீட்டின் முன் பக்கம், பின் பக்கம் இருந்த ஓடுகளை மாற்றியுள்ளோம், முன் பக்கம் மாடி கட்டியுள்ளோம். எனது வீடு உள்ள சர்வே எண் 227/2 ஆகும். பிரதிவாதி வீடு உள்ள சர்வே எண் 227/3 ஆகும். என் வீட்டின் தெற்கு பக்கம் பிரதிவாதி உள்ளார் என்றால் சரிதான்.

தெற்கு பக்கம் ஏற்கனவே இருந்த பிரதிவாதியின் வீடு 100 ஆண்டுகள் பழைமையானது என்றால் எனக்கு 48 வயது ஆகின்றது. ஆனால் அந்த வீடு பழைமையானது தான். அந்த வீட்டை இடித்துவிட்டுத் தான் தற்போது பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான்.

எனக்கு திருமணம் முடிந்து 26 ஆண்டுகள் ஆகின்றது. எனக்குத் திருமணமான பின்பு தான் எங்கள் வீட்டின் உட்பகுதியில் சில மராமத்து பணிகள் செய்தோம். அதற்கு முன்பாகவே வீட்டின் முன்பகுதியில் மாடி கட்டப்பட்டுவிட்டது.

ஏற்கனவே வாதியின் பவர் ஏஜென்டாக இருந்த சூசைமாணிக்கம் என் அப்பா ஆவார். அவர் தான் என் கணவருக்காக பவர் ஏஜென்ட் என்ற முறையில் இந்த வழக்கை நடத்திவந்தார் என்றால் சரிதான். தற்போது அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் பவர் ஏஜென்ட் என்ற முறையில் வழக்கை நடத்தி வருகிறேன்.

என் கணவர் வெளிநாட்டில் இருந்து வருகிறார். சுமார் 20 வருடங்களுக்கு மேலாக அவர் வெளிநாட்டில் இருந்து வருகிறார். ஏற்கனவே பவர் ஏஜென்ட் என்ற முறையில் தாவா வழக்கை நடத்தி வந்ததில்

அந்த பவரை ரத்து செய்துவிட்டோம். ரத்து செய்த பவர் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டோமா என்றால் அது பற்றி எனக்கு நினைவில்லை.

1914 மற்றும் 1923 ஆகிய கிரய பத்திரத்திங்களின் அடிப்படையில் நான் வழக்காடுகின்றேன் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கான வருவாய் துணை ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் நான் பார்த்தில்லை. வழக்கு சொத்திற்கான எந்த வருவாய் துறை ஆவணங்களைப் பற்றியும் எனக்குத் தெரியாது.

பிரதிவாதிகள் கட்டிவரும் வீட்டின் தென்வடல் அளவு எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. அது போல் கிழமேல் அடி அளவு பற்றியும் எனக்குத் தெரியாது.

ஏற்கனவே இருந்த பிரதிவாதிகளின் பழைய வீட்டின் வடக்குப்பக்க கிழமேல் ஓட்டுத்தாழ்வாரம் எங்கள் வீட்டின் தெற்குப்பக்க கிழமேல் சுவருடன் பொருத்தி இருந்தது என்றால் சரியல்ல.

பிரதிவாதிகளின் பழைய வீட்டின் வடக்குப்பக்கம் உள்ள ஓட்டுத்தாழ்வாரத்திற்கும் எங்கள் வீட்டின் தெற்குப்பக்கம் உள்ள கிழமேல் சுவருக்கும் இடையில் காலி இடம் இருந்தது. அந்த காலி இடத்தில் வடக்குப்பக்கம் பிரதிவாதிகளும், தெற்குப்பக்கம் நாங்களும் காலி இடத்தை அனுபவம் செய்து வந்தோம்.

வடக்குப்பக்கம் உள்ள காலி இடம் பிரதிவாதிகளுக்கானது, தெற்குப்பக்கம் உள்ள காலி இடம் எங்களுக்கானது. பிரதிவாதிகளுக்கு தென்வடல் கீழ்புறம் எவ்வளவு அடி அளவு பாத்தியம் என்றும், தென்வடல் மேல்புறம் எவ்வளவு அடி அளவுகள் பாத்தியம் என்றும் எனக்குத் தெரியாது. அதே போல் கிழமேல் கீழ்புறம், மேல்புறம் அடி அளவுகளும் எனக்குத் தெரியாது.

பிரதிவாதிகளுக்கு எவ்வளவு அடி அளவுகள்

தென்வடலிலும், கிழமேலிலும் பாத்தியம் என்று தெரிந்தால் தான் அவர்கள் எவ்வளவு இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

என் கணவர் தற்போது வெளிநாட்டிற்கு சென்று எவ்வளவு காலம் இருக்கும் என்றால் 1 வருடம் இருக்கும். நான் தாக்கல் செய்துள்ள கிரய ஆவணங்கள் நான் திருமணமாகி போனதற்கு முன்னால் ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி கிரய ஆவணங்கள் அனைத்தும் என் கணவர் வழி பாத்தியப்பட்ட ஆவணங்கள் ஆகும். அதனால் என் கணவரிடம் கேட்டால் தான் அந்த ஆவணங்களின் முழு விபரம் தெரியும் என்றால் சரிதான்.

பிரதிவாதிகளுக்கு அவர்களுக்குப் பாத்தியமான தென்வடல் கீழ்புறம், மேல்புறம் 57 அடி கிழமேல் கீழ்புறம், மேல்புறம் 15 அடி பாத்தியம் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பிரதிவாதிகள் வீட்டின் அடி, அளவுகள் எனக்குத் தெரியாது.

பிரதிவாதிகள் அவர்கள் இடத்தில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் எங்கள் இடத்தில் 6.5 அடி நிளத்தை ஆக்கிரமிப்பு செய்து அதில் 5 அடியில் வீடு கட்டியுள்ளார்கள். அது போல் எந்த ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும் வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் வீடு கட்டியுள்ளார்கள் என்றாலும் சரியல்ல.

எங்கள் கிரயப்பத்திரங்கள் படி வருவாய் துறை ஆவணங்களில் எங்களுக்கு அடி அளவுகள் ஏற்படவில்லை என்பது எனக்குத் தெரியும். அதே போல் பிரதிவாதிகளுக்கு அவர்கள் சொத்திற்கான அடி அளவுகள் என்ன ஏற்பட்டது என்பதும் எனக்குத் தெரியாது.

மேற்படி அடி, அளவுகளை சரி செய்வதற்கு அப்போது பவர் ஏஜென்டாக இருந்த என் தகப்பனார் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தார். அந்த மனுவில் ஏதும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்ற விபரம்

எனக்குத் தெரியாது. அந்த மனு நிலுவையில் உள்ளதா என்ற விபரமும் எனக்குத் தெரியாது.

தற்போது எங்கள் கிரயப்பத்திரத்தின் அடிப்படையிலும், பிரதிவாதிகளின் வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையிலும் தாவா சொத்துக்களை அளவீடு செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

**( பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்பட்டது )**

**-Sd-**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**-Sd-**
**District Munsif,**
**Manamadurai.**